6

# ஒரு வரலாற்றுச் சுருக்கம் தமிழ்நாட்டில்

# பொந்திலியர்கள்

1 தமிழ்நாட்டிலுள்ள பொந்திலியர்களின் மூலத்தை இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது. சென்னை (சென்னையும் ஆந்திராவும் இணைந்த முன்னாள்) மாகாணத்தின் 1891ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, உத்திரப்பிரதேசத்திலுள்ள பந்தா மாவட்டத்தின புந்தல்கண்ட் என்கிற மலைப்பிரதேசத்தின் ''பொந்திலிகள்'' என்று தங்கள் இனத்தின் பெயர் உருவாகி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த இடத்திலிருந்து நம்முடைய மூதாதையர் இந்தியாவின் தென்பகுதிக்கு குடிபெயர்ந்துள்ளனர். இது, இராஜஸ்தான் மாநிலத்தின் பிகானீர் மாவட்ட தொல்பொருள் ஆய்வக இயக்குநர் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இராஜபுத்திர வம்சமாக மதிக்கப்படவேண்டிய அவர்கள், பிறகு, காலப்போக்கில் அரசியல் சூழல்களால் தங்கள் நிலையில் தரம் தாழவேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர். பல்வேறு காரணங்களால் நம் மூதாதையர் தென்னிந்தியாவிற்குக் குடிபெயர்ந்தனர். 17 மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில், நம் இனத்தவரை வட இந்திய முகம்மதிய ஆட்சி யாளர்களால் கட்டாயப்படுத்துப்பட்டு முஸ்லீம்களாக மதம் மாற வைத்தமையால், நம்மில் பெரும்பாலோர் தென்னிந்தியாவிற்குக் குடிபெயர வேண்டியக் கட்டாயம் ஏற்பட்டது. தங்களுடைய இனத்தின் பரம்பரைக் கலாச்சாரத்தையும், மதிப்பையும் நிலை நிறுத்தவும்

மதமாற்றத்திலிருந்து தப்பிக்கவும் நாட்டின் தென்பகுதியை நாடிச் செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டது. தெற்கே குடிபெயர்ந்தவர்கள் தங்களின் சுய வாழ்வுக்காக குழுவாகவும், சிறிய கூட்டங்களாகவும் தமிழ்நாட்டின் பல இடங்களில் பரவி இருந்தனர். அதன்பிறகு அவர்கள் தங்கள தாயகமான புந்தில்கண்டிற்கு செல்லவேயில்லை. மேலும் அவ்விடம் அவர்களுக்கு அயல்நாடாகவே மாறிப்போனது.

நம்முடைய மூதாதையரே "இராஜபுத்திர பொந்தில்கள்" என்பது தெரிய வந்தால் வாசகர்களுக்கு சுவாரசியமான விஷயமாக இருக்கும். இந்திய வரலாற்றில் எட்டாம் நூற்றாண்டின்போது நிகழ்ந்த மகத்தான அரசியல் நிகழ்வில் பண்டைய இந்திய ஆரிய இனத்தின் சத்திரியர்களில் இராஜபுத்திரர்கள் போர்வீரர்களாக உயர்ந்து நின்றனர். இராஜபுத்திரர்கள் பண்டைய இந்தியாவின் புகழ்பெற்ற இந்து அரசர்களின் வம்சாவழியில் வந்தவர்கள். அவர்கள் தங்கள் ஆரம்ப இடமான இராஜபுதனத்தில் இருந்தும் ஒருங்கிணைந்து போரிடும் குலத்திலிருந்தும் வேறுபட்டு நாட்டின் பல்வேறு இடங்களில் பரவி, ஒரு குறிப்பிட்ட பொதுவான நியதிக்குள் அடங்கிவிட்டனர். முப்பத்தாறு இராஜகுலங்களாக (ஜாதிகளாக) திகழ்ந்த இராஜபுத்திரர்கள் மூன்று பெரிய அரச வம்சத்தினராகப் பகுக்கபட்டுள்ளனர். அவை (1) சூரிய வம்சத்தவர் (சூரியனின் வழி வந்தவர்), மனு, இஷ்வாகு, ஹரிச்சந்திரன், ரகு, தசரதன் மற்றும் ஸ்ரீராமன் வழிவந்தவர்கள் (2) சந்திரவம்சம் அல்லது சோமவம்சத்தவர் (சந்திரனின் வழி வந்தவர்), யயாதி, தேவானுஷன், புரு, யது, பாண்டு, யுதிஷ்டிரர் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணன் வழிவந்தோர். (3) அக்னிகுலத்தவர் (அக்னியின் வழி வந்தவர்) : அக்னிபாலன், சேவாச்சன், மல்லன், குலுஞ்சரன், அஜபாலன் மற்றும் துலாய்ராய் வழி வந்தவர்கள் ஆவர்.

தூய மரபு வழித் தோன்றல்களின் முழுமையான குடும்பங்களாகவும், ஒரு உயர்குடி மக்களாகவும், அரசாளும்

தளபதிகளின் வாரிசுகளாகவும் இருந்த காரணத்தினால், இராஜபுத்திரர்கள் இந்தியாவின் பிரபுத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். இந்தியாவின் பண்டைய ஆட்சியாளர்கள் மற்றும் பேரரசர்களின் வழித்தோன்றல்களான பல்வேறு இளவரசர்கள் மற்றும் அரசியல் ரீதியாக பரம்பரையாக பேரரசுக்குரிய தங்கள் அரசாங்கத்திற்கு கீழ்பணியாற்றியவர்கள் ஆகியோரின் அடிச்சுவடுகளைக் கண்டெடுக்கப்படுகின்றன என்று (இராஜபுத்திரர்கள் - ஒரு போராடும் இனம் என்ற நூலின் ஆசிரியர்) தாகூர் ஜேஸ்ராஜ் ஸிஸோடியா என்பவர் கூறுகிறார்.

தென்னிந்தியாவிற்கு வருவதற்கு முன் பொந்தில் சமூகத்தின் மூதாதையர் இராஜாக்கள்/அரசர்கள்/கோட்டைத் தலைவர்கள்/ ஜமீன்தார்கள்/ படைத் தளபதிகள்/ ஜமேதாரர்கள்/ கிராமத் தலைவர்கள்/ படேல்கள் என விளங்கினர். குறிப்பிட்டு வெளிப்படை யாகச் சொல்ல வேண்டுமாயின் சமூக வாழ்க்கையில் பொந்தில்கள் தங்கள் மதத்தில் உயர்ந்தவர்களாகவும், நிலச் சுவான்தாரர் களாகவும், இந்தியாவில் அரசாண்டவர்களின் உறவினர்களாகவும் இருந்தனர். எடுத்துக்காட்டாக, தெற்கில் செஞ்சியை ஆண்ட இராஜா தேசிங் மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒசூர் தாலுக்காவில் அமைந்துள்ள வெங்கட்டகிரி கோட்டைத் தலைவர் ஆகியோரைக் குறிப்பிடலாம். சந்தேகமின்றி 300 ஆண்டுகளுக்கு முன் பொந்தில் சமூகத்தின் மூதாதையர் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகவும், மகிழ்ச்சியோடும் நல்லதொரு உயர்ந்த சமூக அந்தஸ்தோடு வாழ்ந்தனர் என்று தெரிகிறது. ஆனால் இருநூறு ஆண்டுகட்குப் பிறகு அதாவது இருபதாம் நூற்றாண்டின் துவக்கதில் அவர்களது உயரிய அந்தஸ்து மற்றும் பொருளாதார அந்தஸ்து ஆகியவை சீர்கேடடைந்தது. இராஜாக்களின் சந்ததிகள் பியூன்களாகவும், கோட்டைத் தலைவர்களின் சந்ததிகள் சாதாரணச் சிப்பாய்களாகவும் ஆனார்கள்.

அயல்நாட்டு பத்திரிகையாசிரியர் திரு எட்ஜர் தர்ஸ்டன் என்பவர் 1901ஆம் ஆண்டு வெளியிட்ட தன்னுடை ''இந்தியாவின் ஜாதிகள் மற்றும் ஆதிவாசிகள்'' என்னும் நூலில் சூத்திரர்கள் என அழைக்கப்படும் பலர் ''க்ஷத்திரய இராஜபுத்திர பொந்தில்கள்'' ஆக இருந்தவர்கள். அதில் ஒரு பகுதியினர் தோல் தயாரிப்பில் ஈடுபட்டமையால் ''தோலீஸ்'' அதாவது சக்கிலியர் என்று அழைக்கப்பட்டனர். ஒரு காலத்தில் அதாவது கி.பி. 1700ல் தங்கள் மதத்தில் உயர்குலத்தோராக விளங்கியோர் கி.பி.1900 வாக்கில் கோயில்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை என்ற திரு எட்ஜர் தர்ஸ்டன் அவர்களின் வரிகளை காணும்போது நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. கி.பி. 1900ன் அந்த நாட்களில் பொந்தில் இனத்தவர், அறுவடை செய்வோராக, பியூன்களாக, ஜமீன்தார்களின் பாதுகாவலர்களாக, சிப்பாய்களாக, காவலர்களாக, வரிவசூல் பியூன்களாக மற்றும் சக்கிலியர்களாக வாழ்ந்து வந்தனர் என அவர் மேலும் தன்னுடைய நூலில் குறிப்பிட்டுள்ளார். (தோல் பொருள் செய்யும் தொழில் என்பது மதிப்பில்லாததும் அசுத்தமானதும் மற்றும் இழிதொழிலாகவும் கருதப்பட்டது. இத்தொழிலில் ஈடுபடும் மக்கள் சக்கிலியர் என அழைக்கப்பட்டனர்)

சென்னை மாகாணத்தின் 1891ஆம் ஆண்டு மக்கள்

1.

தொகைக் கணக்கெடுப்பின்படி புந்தல்கண்டிலிருந்து வெளியேறிய பொந்தில் இனத்தவர் இராஜபுத்திர்களாக இருக்கவே விரும்பினர். மேலும் அவர்கள் சைவர்கள் மற்றும் வைணவர்கள் என இரு பிரிவுகாளக இருந்தனர். சைவர்கள் தங்கள் சடலங்களை புதைக்கவும், வைணவர்கள் தங்கள் சடலங்களை எரிக்கவும் செய்தனர் எனத் தெரிகிறது. இப்பழக்கம் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. சிவன், விஷ்ணு வழிபாடுகள் தவிர கிராமத் தெய்வங்களையும் வழிபடுகிறார்கள் (என எண்மரில் மூவர் ஒப்புக்கொள்கின்றனர்). வட ஆற்காடு பொந்தில்கள் பற்றி திரு. எச். ஏ. ஸ்டூவர்டு என்பவரால் எழுதப்பெற்ற ''வடஆற்காடு மாவட்டம்'' எனும் குறிப்பேட்டில் விவரிக்கப்பட்டுள்ளது. புந்தல்கண்டிற்குப் புறத்தே உள்ளோரின் பெயர் பல்வேறுவிதமாக வைஸ்யர்கள் மற்றும் சூத்திரர்களின் ஜாதிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. முதலில் அவர்க்ளின் பெயர்களோடு ''லாலா'' என்றும் பிறகு ''சிங்'' என்றும் அடைமொழிகள் இட்டுக்கொண்டனர். மேலும் தங்களை க்ஷத்திரியர்கள் அதாவது இராஜபுத்திரர்கள் என்று சொல்கின்றனர். வைசிய பொந்தில்கள் குறைந்த எண்ணிக்கையில் வேலூர், சித்தூர் மற்றும் ஆரணி போன்ற இடங்களில் காணப்படுகின்றனர். அவர்க்ள் பெரும்பாலானோர் லேவாதேவிக்காரர்களாக உள்ளனர். சூத்திரர்கள் பெரும்பாலும் பணியில் இருப்பவர்கள். ''தாங்கள் சூத்திர்கள் மட்டும் அல்ல; நாட்டிலுள்ள இராஜபுத்திர வம்சத்தின் வழித்தோன்றல்கள்; தங்களில் பெரும்பாலோர் அவ்வழி வந்தோரே'' என சிலர் கூறுகின்றனர். அவர்கள் தங்கள் சமூகத்தவர் என முற்றிலும் முடிவான நிலையில் இருந்தாலொழிய மற்ற தொழில்வழி பொந்தில்களும் இணைந்து மதிப்புடன் வாழ மறுக்கின்றனர். அவர்களது திருமண சடங்குகள் இராஜபுத்திர்களோடு ஒத்திருக்கின்றன. 1901ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, சம்பல்பூரிலிருந்து வரும் குவாலர்கள் மற்றும் வாணிகர்கள் பொந்தில்க்ளின் ஒரு துணை ஜாதியாக நிலைபெற்றிருக்கின்றனர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனத்திற்கு அருகே அமைந்துள்ள செஞ்சியை அரசாண்ட ஒரு இராஜபுத்திர அரசரான இராஜா தேசிங்கை அனைவரும் அறிந்ததே! அவர் எந்த அதிகாரத்திற்கும் கப்பம் எதுவும் கட்டாமல் தன்னிச்சையாக தன்னுடைய இராஜ்ஜியத்தை ஆட்சி செய்தார். எவராலும் அடக்கமுடியாத சக்திவாய்ந்த குதிரையை நிர்வகித்து வந்த இராஜாதேசிங்கின் திறமையை பாராட்டி, அதற்குப் பரிசரக முகலாய பேரரசர் ஔரங்சீப் அவர்கள் அணைத்து வரிச்சுமைகளையும் விலக்கிக் கொண்டார். சுதந்திரமாக அரசாண்ட இராஜாதேசிங்கைக் கண்டு பொறாமை கொண்ட கர்னாடக நவாப் அவர்கள், தங்களுக்கு கப்பங்கட்டச் சொல்லி வற்புறுத்தினார். கப்பங்கட்ட மறுத்ததனால், தன்னுடைய படையை இராஜபுத்திர அரசனுக்கெதிராகப் போரிட அனுப்பினார். அந்தப் போரில் பலம் வாய்ந்த படையுடன் போரிட்டார். இராஜாவின் படையில் வெற்றிகரமான 300 இராஜபுத்திர வீரர்கள் இருந்ததாக வெளிப்படையாகக் கூறப்படுகிறது (சென்னையின் பழைய வரலாறு). ஆனால் மதுகர் (ஓர் முகம்மதிய நண்பர்) மற்றும் சக்திவாய்ந்த அவருடைய குதிரையும் இறந்ததைக் கேள்வியுற்றதும் இராஜாதேசிங் அப்போர்களத்திலேயே உயிர் துறக்க மனந்துணிந்தார். இராஜாதேசிங் தன் சொந்த வாளினாலேயே கொல்லபட்டார்

எனச் சொல்லப்படுகிறது. தன் தலைவன் இறந்த செய்தியைக் கேள்வியுற்றதும் இராணி (இராஜாதேசிங்கின் மனைவி) அக்னி குண்டத்தில் குதித்து உடன்கட்டையேறினார். இராணியின் இச்செய்கையை வியந்து பாராட்டிய நவாப் அவர்கள் இராணியின் பெயராலேயே இராணிப்பேட்டை என்ற ஒரு நகரை நிர்மானித்தார். அது தற்போது, முன்னாள் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டமாகத் திகழ்ந்த தற்போதைய வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

தற்போது நம்முடைய பொந்தில் சமூகத்தில் பெருந்தன வந்தர்களோ, தொழிலதிபர்களோ, வணிக மாந்தர்களோ, பெரிய அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ இல்லை. நம்முடைய சமூகத்தை பிற்படுத்தப்பட்ட இனப்பட்டியலில் இணைக்க பட்டதைத் தவிர வேறு எந்த அரசுப் பாதுகாப்பும் நமக்கில்லை. 1994ல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் நம்முடைய இனம் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே அதாவது 1.3 லட்சங்களே எண்ணிக்கையில் குறைவான வாக்குகளும், சிறிய குழுக்களாக தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே பரவலாக இருப்பதாலும், அரசியல் ஆதர வில்லாததாலும், நம்முடைய சமூகம் உயர்வு பெறுவதி லிருந்து தூக்கியெறியப்பட்டுள்ளது. நாம் வாக்கு வங்கியைக் கவர்ந்திருந்தால் அரசியல்வாதிகள் அக்கறை செலுத்தி யிருப்பர். தமிழக அரசால் அமைக்கப்பட்ட முன்னாள் பிற்படுத்தபட்டோர் வகுப்புகளின் கமிஷன், நம்முடைய சமூகத்தின் பின்னடைவை ஒப்புக்கொண்டுள்ளது.

பொந்தில் சமூகத்தினர் அதிகமாக குடியேறியுள்ள பகுதிகளாவன: தென்னாற்காடு மாவட்டம்: 1) கள்ளக்குறிச்சி 2) சங்கராபுரம் 3)வானமாதேவி 4) பொன்னன்குப்பம் 5) செஞ்சி. இராஜாதேசிங் இம்மாவட்டத்தில் செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்ததே இதற்கு முக்கியக் காரணமாகும். மற்ற மாவட்டங்களில் அவர்கள் மிகமிக சிதறிய நிலையில் உள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில் வசிக்கும் பொந்தில் சமூகத்தினரை ''இராஜபுத்திரர்கள்'' என்றும் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ளோரை ''ஆரபொந்தில்'' என்றும் அழைக்கிறார்கள். ஆனால் ஆந்திரப்பிரதேசத்தில் வசிக்கும் நம்முடைய இனத்தவர் ஆரபொந்தில் என அழைக்கப்படுவதுடன் ''பழங்குடியினர் வகுப்பிலும்'' சேர்க்கப்பட்டுள்ளனர். கர்நாடகத்தில் நம்முடைய இனத்தவரை முன்னேறிய சமூகத்தினர் ஆக இருந்ததை மாற்றி 1994ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகமாக அறிவித்துள்ளனர். கேரள மாநிலத்தில் மிகவும் குறைந்த எண்ணிக்கையே உள்ளதால், இடம் ஒதுக்குவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப் படவில்லை. தமிழ்நாட்டில், அனைத்து முன்னாள் அர சாணைகளிலும் உயர்ந்தபட்சமாக பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பிரஜைகளாக நம்முடைய இனம் அறிவிக்கப்பட்டுள்ளது. (அரசியல் அமைப்புச் சட்டத்தின் 15(4) மற்றும் 16(4) பிரிவுகளின் கீழ், சமூகம் மற்றும் கல்வி ரீதியாக பிற்படுத்தப் பட்ட ஜாதிகளையும், சமூகத்தினரையும் ஒதுக்குவதற்காக என்று குறிப்பிட்டுள்ளது. G.O.M.S. No. 1564 சமூக நலத்துறை நாள்: 30.7.1985ஐக் காண்க). இதற்கு உடன்படாத பொந்தில் அசோசியேஷன் தலைமையகதம் பிற்படுத்தப் பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்ட பொந்தில் சமூகத்தினரை ''மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில்'' சேர்க்கும்படி தமிழக அரசை வற்புறுத்தியது. இவ்விஷயம் தற்போது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள பொந்தில் சமூகத்தினரை தமிழ்நாட்டில் பழங்குடியினர் வகுப்பில் சேர்க்கத் தேவையான செயற்குறிப்புடன் இந்திய அரசு/கல்யாண் மந்த்ராலயம் மக்கள் நலத்துறை அமைச்சகத்திடம் நமது சங்கம் அணுகியது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியல் புதுப்பிக்கப்படும் வேளையில், சங்கத்தின் செயற்குறிப்பில் கண்டுள்ள அளவுகோளுக்கிணங்க பரிசீலிக்கப்படும் என இந்திய நலத்துறை அமைச்சக இயக்குநர் தெரிவித்தார். மேலும் ஏற்கனவே அரசியல் அமைப்புச் சட்டத்தின் 341(2) மற்றும் 342(2) பிரிவுகளின் கீழுள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியல் க்ஷரத்துக்களில் திருத்தம் செய்ய, பாராளுமன்ற நடவடிக்கை மூலமே நிறைவேற்ற இயலும்.

முடிவுரை:

இராஜபுத்திரர் எனும் வார்த்தை குலம் மற்றும் இனம் என்கிற பெயர்கள் ஒரு உணர்வில் பொதுவான கருத்தாகும். அது குறிப்பிட்ட ஜாதி அல்லது துணை ஜாதிகளை குறிப்பிடவில்லை. பொந்தில் ஆக தீர்மானிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களாகிய நாம் ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பு பிரஜைகள். ஆகவே நம்முடைய ஜாதியை 'பொந்தில்' என நமது சமூக மக்களால் அனைத்து காரணங்களுக்காகவும் குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும். ஆதலால் மற்ற இனத்தவர் போல் நம்முடைய சமூகத்தினர் மீது பற்றுதல் வெளிப்படவில்லையெனில், மண்டல் கமிஷன் அறிக்கையின்படி, எந்த ஒரு சலுகையும் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பிரஜைகளாகிய நாம் பெற இயலாது.

- வெல்க பாரதம் -

# இராஜா தேசிங்கின் வரலாறு சுருக்கம்

1. பெயர் : திரு இராஜா தேசிங்

2. தந்தையின் பெயர் : திரு சொருப் சிங்

3. தந்தையின் முந்தைய தொழில் : முகலாய ஆட்சியில் சேனாதிபதி

4. தந்தை ஆண்ட காலம் : 18–1–1700 முதல் 1714 ஆண்டு வரை

5. தாயார் பெயர் : ராமா பாய்

6. மனைவியின் பெயர் : ராணி பாய்

7. மனைவியின் தந்தையின் பெயர் : பீம் சிங்
தொழில் டில்லி அரசர்
பாதுஷா அவர்களின் முக்கிய சேனாதிபதி

9. சிறிய தந்தையின் பெயர் : தரணி சிங்

10. ஜாதி : பொந்தில் (பொந்தில் கண்ட் இராஜ்புத்)

11. முதாதையார் வாழ்ந்த இடம்: பொந்தில் கண்ட்

12. உயிர் நண்பரின் பெயர் : மகமத் கான்

13. உயிர் நண்பரின் தொழில் : ராஜா தேசிங்கின் முக்கிய சேனாதிபதி

14. உயிர் நண்பரின் தியாகம்: மணக்கோலத்தை துறந்து போரில் ஈடுபட்டு அவரை வெல்ல முடியாமல், மதளலத்கான் என்பவர் துப்பாக்கியால் பின்னால் இருந்து சுட்டதால் மடிதல்.

15. தேசிங்கின் வீர உணர்வு : நேருக்கு நேர் தேசிங்கை வெல்ல முடியாததால், வீர சாகசமும், சமயோசித புத்தியும் நிறைந்த தேசிங்கை பெரிதும் மதித்து அவரை டில்லி முகலாய அரசர் விரும்பினார்கள். மேலும் அவர் தந்தை சொருப் சிங் முகலாய அரசர்களுக்கு செய்த உதவியை எண்ணி தேசிங்கை கொல்லாமல் பிடிக்க எண்ணி போர்களத்தில் அவர் தனியாக பாரசாரியின் மீது வரும் பொழுது நவாப் அவர் பாராசாரியின் காலை வெட்டி ராஜாதேசிங்கை பிடிக்க தைரியம் இல்லாமல் உயிருக்குபயந்து ஓடியவர் நவாப் சாததுல்லா கான் செயல்கள் குறிப்பிடத் தக்கவை.

தன் உயிர் நண்பன் மகமத்கானும், தன் உயிருக்கு உயிராக நேசித்த குதிரையையும், தனது வீரமிக்க வீரர்களையும் போர்களத்தில் முறை தவறி நவாப் செய்த வஞ்சனைகளை எண்ணி தேசிங் அதிக துக்கம் மேலிட்டு தனது உயிரை துச்சமென மதித்து தான் நேசித்த செஞ்சி நாட்டு மக்களின் தன்மானத்திற்கு தன்னைத்தானே மாய்த்துக்கொண்டு உயிர் தியாகம் செய்தார் ராஜா தேசிங்.

## இராஜா தேசிங் ஆரம்ப வரலாறு

1698ல் மீண்டும் மொகலாய சேனாதிபதி ஜுல்பிகர்கான் இராஜபுத்திரர் உதவியுடன் செஞ்சியை கைப்பற்றினார். 18-1-1700 அன்று ஜுல்பிகார் கானுக்கு டில்லி வரும்படி அவுரங்கஜீபிடமிருந்து தாக்கீது வரவே செஞ்சியின் வெற்றிக்கு பெரிதும் உதவி செய்த இராஜபுத்திர சேனாதிபதி சொரூப் சிங்கிடம் செஞ்சியை ஒப்படைத்து ஜுல்பிகர்கான் டில்லி திரும்பினார். அன்று முதல் சொரூப் சிங் நிர்வாகத் திறமையுடன் செஞ்சி ஆட்சி செய்து அங்குள்ள மக்களுக்கும், இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு அடிகோலினார். மக்களின் நலமே பெரிதென எண்ணி ராச்சியத்தை நடத்தி வந்தார். 1707ல் அவுரங்சீப் இறக்கவே அவருடைய குமாரர் ஷா ஆலம் இவருடன் சமூக உறவு வைத்துக் கொள்ளவில்லை. மேலும் ஆங்கிலேயரும பிரெஞ்சுக் காரர்களும் வியாபாரம் செய்து கொண்டு இருந்தது டன் இல்லாமல் தென்னாட்டில் வேரூன்ற முயற்சித் துக் கொண்டிருந்தனர். அவர்கள் சொரூப் சிங்கிற்கு எதிராக கடலூர் எல்லையில் கலகம் செய்தனர் அக் கலகத்தை திறமையுடன் அடக்கினார். ஆங்கிலேயர் சொரூப் சிங்கிடம் சமாதானம் செய்து கொண்டு 4000 பகோடாக்கள் வரி செலுத்துவதாக கூறவே டில்லி அரசரிடம் சிபாரிசு செய்து அவர்கள் வியாபாரம் செய்யும் காலத்தை நீடித்து கொடுத்தார்.

டில்லியில் ஷா ஆலம் பல கிளர்ச்சிகளை சமாளித் துக்கொண்டு இருக்கும்போது டில்லி பேரரசருக்கு அவ் வப்போது செய்து வரும் பேருதவியை எண்ணி பகுதிப் பணத்தை கேட்கமாட்டாரென நினைத்து சொரூப் சிங் 12 வருடகாலமாக கிடைத்த வருமானத்தை செஞ்சி வட்டாரத்தில் பல புதிய சீர்திருத்தம் செய்வதற்கும்; கோட்டையை சீர்படுத்துவதற்கும்; மக்களின் நலத்திற் கும் செலவு செய்து விட்டார். ஆனால் எதிர்பாராத வகையில் டில்லி அரசர் ஷா ஆலம் பகுதி பணமாக 70 லட்சத்தை ஒரே தவணையில் செலுத்த சொல்லவே மிக வும் கவலை கொண்டு நோய்வாய்ப்பட்டு சனவரி மாதம் 1714ம் ஆண்டில் சொரூப் சிங் இவ்வுலகை நீத் தார்.

## இராஜா தேசிங் :

சொரூப் சிங் மறைவுக்குப்பின் அவருடைய ஒரே புதல்வர் தேசிங் 20 வயதுள்ள இளைஞர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர் ***பொந்தல் கண்டி**லிருந்து வந்து 1714ம் ஆண்டு செஞ்சி அரசரானார். சிறந்த குதிரை வீரர் எவராலும் அடக்க முடியாத டில்லி பேரரசரின் குதிரையை அடக்கினார். இவரது வீரத்தையும் துணிவையும் கண்ணுற்ற பேரரசரின் இராஜபுத்திர சேனாதிபதி பீம்சிங் தன் புதல்வி ராணிபாயை தேசிங்கிற்கு மணம் செய்து கொடுத்தார். தேசிங் சிறந்த பக்திமான். அடிக்கடி தனது குலதெய்வமாகிய சிங்காபுரத்தில் குடி கொண்டிருக்கும் அரங்கநாதரை வழிபட்டு வருவார். மற்றானுக்கு அடிமைப்பட்டிருக்க மனம் கொள்ளாததால் டில்லி அரசருக்கு அறிவிக்காமல் செஞ்சி அரசராக பிரகடனப்படுத்தி வரிப்பணம் பேரரசருக்கு செலுத்தாமல் சுதந்திர வீரராக ஆட்சி நடத்தி வந்தார். இதனால் கோபமடைந்த பேரரசர் தேசிங்கிடம் கப்பம் வசூலிக்கும்படி ஆற்காடு நவாபு சததுல்லாகானுக்கு தாக்கீது அனுப்பினார் கப்பங் கட்டி வாழ மனமில்லாத தேசிங் தாக்கீதை அலட்சியப்படுத்தவே ஆற்காடு நவாபு செஞ்சி மீது படையெடுத்தார். தனது உயிர் நண்பரான மகபத்கான் துணையுடன் தேசிங் வீராவேசத்துடன் போர் புரிந்தார். ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் நவாபிற்கு உதவி செய்ததால் வீரமும் போதிய படைபலமும் (இராஜபுத்திரர்கள்) உட்பட இருந்தும் நியதிக்கு மாறாக அவர்கள் போரிட்டு தேசிங்கின் உயிர் நண்பர் மகபத்கான் மற்றும் தேசிங்கின் உயிருக்குயிரான குதிரையையும் வஞ்சகமாக கொன்று விட்டதால் இனி வெற்றி அடைய முடியாது என்று எண்ணி, போரில் பகைவன் கையில் இறப்பதை விட பெரும் வீரனாகவே மடிய வேண்டும் என்று எண்ணி, கட்டாரியை தலைக்கு மேலே எறிந்து நெஞ்சில் கட்டாரி படும்படி செய்து 1714ம் ஆண்டு தன் உயிரை மானத்துடன் செஞ்சி மக்களுக்காக அர்ப்பணித்தார்.

தேசிங் 10 மாதங்களே ஆட்சி செய்தாலும் தனது வீரச் செயல்களால் என்றும் அழியாத புகழைப்பெற்று இன்றும் இராஜபுத்திரர்களின் உள்ளங்களில் வாழ்ந்து வருகின்றார்.

---

* **பொந்தல் கண்ட்** : இப்பகுதி இன்றைய உத்திரபிரதேச மாநிலத்தில் பாந்தா மாவட்டத்தில் உள்ள மலை பிரதேசமாகும். பொந்தல் கண்ட் பகுதியை சார்ந்த இராஜபுத்திரர்களை பொந்தல் கண்ட் இராஜபுத்திரர்கள் என்று அழைத்தனர் இன்று **பொந்தில்** என்று அழைக்கப்படுகின்றனர்.

**Monthly BONDIL Free Copy Sent to Life Members Only**

ஆயுள் உறுப்பினர்களுக்கு மட்டும் இலவசமாக அனுப்பப்படும் பொந்தில் மாத இதழ்

<u>நம் சங்கத்தின் பத்து நோக்கங்கள்</u>

1. நம் சமுதாய மக்களை அறிமுகம் செய்தல்.
2. திருமண உறவுகள் விரிவாக ஏற்பட செய்தல்.
3. நம் முன்னவர் வரலாறு அறிதல்
4. நம் கலாச்சாரத்தை பேணி காத்தல்
5. நம் தாய்மொழி இந்தியை படிக்க எழுத உதவுதல்
6. நம் சமுதாயத்தை மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க தொடர்ந்து ஆவண செய்தல்.
7. சமுதாய மக்களுக்கு சொந்தமாக சமுதாய கூடங்களை பெற உதவுதல்
8. ஒரு மாத இதழினை சமுதாய மக்கள் பயனடைய வெளியிடுதல்.
9. இலவச திருமணங்களை நம் ஏழை சமுதாய மக்களின் நன்மைக்காக நடத்துதல்.
10. நம் சமுதாய குழந்தைகளின் மேன்மைக்காக உதவுதல்.

கொள்கைகள் நிறைவு பெற நீங்கள் நம் சங்கத்தில் உறுப்பினர்களாக ஆகிவிட்டீர்களா? இல்லை என்றால் உடன் சேருங்கள். நன்றி.

**BONDIL ASSOCIATION**
40, Kuppu Muthu Street.
Triplicane, CHENNAI - 600 005.